# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 59 /பேரூ/2026**
**நாள் : 17.07 .2026**

M. கதிரவன்,
தலைஞாயிறு,
நாகப்பட்டினம் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி,
நாகப்பட்டினம் மாவட்டம். – எதிர் மனுதாரர்

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், தலைஞாயிறு, கடைத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. கதிரவன் என்பவரது 18.02.2026 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.02.2026 அன்று பெறப்பட்டு, 59/பேரூ/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், தலைஞாயிறு, கடைத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. M. கதிரவன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்த தனது 18.02.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"நான் தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சியின் 08வது வார்டு உறுப்பினராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மற்றும் துணைத்தலைவராகவும் பணியாற்றி வருகிறேன். மேற்படி பேரூராட்சியில் பணியாற்றி வந்த செயற் பொறியாளர் திரு ரமேஷ் அவர்கள் சில அரசு அதிகாரிகள் மற்றும் சில அரசியல் கட்சிகளின் தூண்டுதல் பெயரில் என் மீது பொய்யாக காவல் துறையால் தொடரப்பட்ட ஒரு வழக்கின் காரணமாக, கடந்த நான்கு மாதங்களாக நான் முன் ஜாமீன் கோரி சட்டப் போராட்டங்களை முன்னெடுத்து வந்தேன். எதிர்பாராத இந்தச் சூழ்நிலையினால் கடந்த மூன்ற மாதங்களாக நடைபெற்ற மன்றக் கூட்டங்களில் என்னால் கலந்துகொள்ள இயலவில்லை. இது தொடர்பாக நான் முறைப்படியான விளக்கத்தை அளிக்கத் தயாராக இருந்த நிலையில், பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் மன்றத் தலைவர் அவர்கள் எனக்கு எவ்வித முன்னறிவிப்பு (Show Cause Notice) அனுப்பாமலும் எனது தரப்பு விளக்கத்தை கேட்காமலும்

ஒரு தலைப்பட்சமாக செயல்பட்டுள்ளனர். அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக என்னை தகுதி நீக்கம் செய்ய மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். தமிழ்நாடு உள்ளாட்சி சட்டங்களின்படி, ஒரு உறுப்பினர் கூட்டங்களுக்கு வராத பட்சத்தில், அவரிடம் விளக்கம் கேட்க வேண்டியது நிர்வாகத்தின் கடமையாகும். முறையான நடைமுறைகளைப் பின்பற்றாமல் நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானம் சட்டத்திற்குப் புறம்பானது. எனவே, மாண்புமிகு நடுவர் அவர்கள் இவ்விவகாரத்தில் தலையிட்டு சட்ட விரோதமாக நிறைவேற்றப்பட்ட அந்தத் தீர்மானத்தை ரத்து செய்ய ஆணையிட வேண்டும். எனது உறுப்பினர் பதவியைத் தொடர்ந்து நீட்டிக்கவும், மக்கள் பணியாற்றவும் பாதுகாப்பு வழங்க வேண்டும் என மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 25.03.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. தலைஞாயிறு முதல்நிலை செயல் அலுவலர் தனது 07.04.2026 நாளிட்ட அறிக்கை ந.க.எண். 147/2025/அ1-ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

(i) பேரூராட்சி மன்ற 8வது வார்டு மன்ற உறுப்பினர் திரு. ம. கதிரவன் என்பவர் தான் பங்கேற்க ஜூன் 2025ஆம் மாதம் 30.06.2025 நடைபெற்ற சாதாரண மன்ற கூட்டத்திற்கு பிறகு தொடர்ச்சியாக 26.08.2025, 29.09.2025 மற்றும் 27.10.2025 ஆகிய நாட்களில் நடைபெற்ற மன்ற கூட்டங்களுக்கு இப்பேரூராட்சி அலுவலக மன்ற கூட்ட வருகை பதிவேடு மற்றும் மன்ற கூட்ட அழைப்பு பொருள் நிரல் அனுப்புகை ஒப்புகை பதிவேடு மூலம் கூட்ட அழைப்பிதழ் நேரடியாகவும் அனுப்பப்பட்டதில் 26.08.2025 மற்றும் 29.09.2025 ஆகிய கூட்டங்களுக்கு இப்பேரூராட்சி அலுவலக உதவியாளர் மூலம் நேரடியாக அனுப்பப்பட்டதில் வீடு பூட்டப்பட்டிருந்தது மற்றும் 27.10.2025ல் நடைபெற்ற கூட்ட பொருள் அழைப்பு அலுவலக உதவியாளர் மூலம் நேரடியாக அனுப்பப்பட்டதில் வீட்டில் உள்ள நபரால் தபால் பெறப்பட்டது மற்றும் பதிவு அஞ்சல் ஒப்புகையுடன் அனுப்பப்பட்டதில் தபால் மனுதாரர் பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வரப்பெற்றது என்ற விவரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ii) மேலும் இப்பேரூராட்சி அலுவலக அறிவிப்பு ந.க.எண். 147/2025/அ1 நாள் 08.10.2025ன்படி தொடர்ச்சியாக இரண்டு கூட்டங்களுக்கு வருகை புரியாதது தொடர்பாக தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 விதிகள் 2023 பிரிவு 32-1(1) அடுத்த சாதாரண கூட்டத்திற்கு வருகை புரியாமல் இருந்தால் அவர் பதவி இழந்தவர் ஆவார் என குறிப்பிட்டு அக்டோபர் மாத கூட்டத்திற்கு வருகை புரிந்திட அறிவிப்பு நேரடியாகவும் பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன் கடிதம் அனுப்பப்பட்டதில் மனுதாரர் பெற்றுக்கொள்ளாமல் கடிதம் திரும்ப வரப்பெற்றது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(III) 08/10/2025 நாளிட்ட இப்பேரூராட்சி அலுவலக அறிவிப்பு கடிதம் ந.க.எண். 147/2025/அ1 அனுப்பப்பட்டும் 3வது சாதாரண கூட்டத்திற்கு வருகை புரியவில்லை. எனவே உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு எண். 32-1 (1)ன்படி தொடர்ச்சியாக கூட்டங்களுக்கு வருகை தரவில்லை எனில் தகுதி நீக்கம் ஆனவர் என கருதப்படும் என தெரிய வந்தது. மனுதாரருக்கு இப்பேரூராட்சி அலுவலக ந.க.எண். 147/2025/அ1 நாள் 27.10.2025 மற்றும் 17.11.2025 அறிவிப்பு அனுப்பப்பட்டு உரிய விளக்கத்தினை மன்றத்திற்கு தெரிவித்திட கடிதங்கள் நேரடியாகவும் பதிவு அஞ்சல் ஒப்புகை அட்டையுடன் கடிதம் அனுப்பப்பட்டதில் கடிதம் திரும்ப வரப்பெற்றது. மேலும் உரிய விளக்கம் பேரூராட்சி மன்றத்திற்கோ அல்லது செயல் அலுவலரிடமோ தெரிவிக்கப்படவில்லை என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

(iv) எனவே பேரூராட்சி மன்ற தலைவர் தலைமையில் 28.11.2025 கூடிய பேரூராட்சி மன்ற கூட்டத்தில் கலந்துகொள்ள அழைப்பிதழ் அனுப்பப்பட்டும் 8வது வார்டு உறுப்பினர் கலந்துகொள்ளவில்லை. எனவே கூட்டத்தில் தலைவர் மற்றும் 13 உறுப்பினர்கள் ஆதரவுடன் 3 சாதாரண கூட்டங்களுக்கு வருகை தராமலும் மீண்டும் பதவி அமர்த்திட எந்தவிதமான விளக்கங்களும் பேரூராட்சிக்கும் மன்றத்திற்கும் விளக்கம் எதுவும் அளிக்கப்படவில்லை. எனவே அவர் 8வது வார்டு உறுப்பினர் பதவியிலிருந்து தகுதி இழந்தவராக மன்றம் ஏகமனதாக தீர்மானித்து தீர்மானம் இயற்றப்பட்டது என்ற விபரம் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் தகுதி இழப்பு தொடர்பாக மனுதாரருக்கு அனுப்பப்பட்ட கடித அறிவிப்புகள், அனுப்புகை பதிவேடு மன்ற கூட்ட வருகை பதிவேடு தீர்மானம் மற்றும் இதர ஆவணங்களுடன் செயல் அலுவலர் மூலம் தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அனுப்பப்பட்டது. மேலும் மனுதாரருக்கு பேரூராட்சி மன்ற கூட்ட அழைப்பு, பொருள் நிரல் அழைப்பு, அனுப்புகை ஒப்புகை பதிவேடு மன்ற கூட்ட வருகை பதிவேடு மற்றும் இதர கடிதங்கள் அனுப்பப்பட்ட நகல்கள் இத்துடன் இணைத்து பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது" என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரை 26.05.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 22.04.2026 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. M. கதிரவன் என்பவர் 26.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "M. கதிரவன் என்கின்ற நான் தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி மன்ற 8வது வார்டு உறுப்பினராகவும் மற்றும் பேரூராட்சி மன்ற துணைத் தலைவராகவும் பணியாற்றி வருகிறேன்.
- இந்நிலையில் பேரூராட்சியின் செயற் பொறியாளர் திரு. ரமேஷ் என்பவர் சில அதிகாரிகள் மற்றும் அரசியல் கட்சியின் தூண்டுதலின் பேரில் தன் மீது பொய்யான புகாரினை காவல் துறையில் அளித்த வகையில், காவல் துறையில் தொடரப்பட்ட வழக்கில் கடந்த 4 மாதங்களாக முன் ஜாமீன் கோரி வந்தேன்.
- மேற்காணும் சூழ்நிலையில் கடந்த 3 மாதங்களாக தலைஞாயிறு பேரூராட்சி மன்றக் கூட்டங்களில் என்னால் கலந்துகொள்ள இயலவில்லை.
- இது தொடர்பாக தான் முறைப்படியான விளக்கத்தை அளிக்க இருந்த நிலையில், தனக்கு எவ்வித முன்னறிவிப்பு (Show Cause Notice) அனுப்பாமலும் தனது தரப்பு விளக்கத்தை கேட்காமலும் ஒருதலைபட்சமாக தன்னை தகுதி நீக்கம் செய்ய பேரூராட்சி மன்றத்தில் 28.11.2025 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர். மேற்படி தீர்மானம் மட்டுமே நிறைவேற்றியுள்ள நிலையில், நான் இன்று வரை தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சியில் 8வது வார்டு உறுப்பினராகவும் மற்றும் பேரூராட்சிமன்ற துணைத் தலைவராகவும் இருக்கும் நிலையில் எனக்கு மாதாந்திர நடைபெறும் மன்ற கூட்டத்திற்கு எவ்வித அழைப்பு கடிதங்களும் வழங்கப்படவில்லை.

எனவே தமிழ்நாடு உள்ளாட்சி சட்டங்களின்படி எந்தவொரு உறுப்பினரும் மன்ற கூட்டத்திற்கு வருகை புரியாத பட்சத்தில் அவரின் விளக்கம் கோரப்பட வேண்டும். ஆனால் சட்டத்திற்கு புறம்பாக எவ்வித நடைமுறைகளையும் பின்பற்றாமல் என்னை தகுதி நீக்கம் செய்ய

கூடாதெனவும் நான் உறுப்பினர் பதவியை தொடர்ந்து நீட்டிக்கவும் ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் 26.05.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்கு மூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி மன்ற 8வது வார்டு மன்ற உறுப்பினர் திரு. ம. கதிரவன் என்பவர் 30.06.2025 அன்று நடைபெற்ற பேரூராட்சி மன்ற கூட்டத்தில் பங்கேற்று, அதன் தொடர்ச்சியாக 26.08.2025 மற்றும் 29.09.2025 அன்று நடைபெற்ற கூட்டங்களுக்கு பங்கேற்க உரிய கூட்ட அழைப்பிதழ் நேரடியாக அனுப்பப்பட்டதில் அவரது வீடு பூட்டப்பட்டிருந்தது.
- இந்நிலையில் தொடர்ந்து 2 மன்ற கூட்டங்களில் வருகை புரியாமல் இருந்து, அடுத்து அக்டோபர் மாதத்தில் நடைபெறும் 3வது மன்ற கூட்டத்திற்கும் வருகை புரியாமல் இருப்பின், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் விதிகள் 2023, பிரிவு 32 (1)(l) ன் கீழ் உறுப்பினர் பதவி இழக்க நேரிடும் என குறிப்பிட்டு 03.10.2025 நாளிட்ட அறிவிப்பு கடிதம் நேரடியாகவும், பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டதில் அதனை பெற்றுக்கொள்ளாமல் கடிதம் திரும்ப வரப்பெற்றது.
- இதனைத் தொடர்ந்து 27.10.2025 அன்று நடைபெற்ற கூட்ட பொருள் அழைப்பு மனுதாரரின் வீட்டில் உள்ள நபரால் தபால் பெறப்பட்டது. பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்ட தபால் மனுதாரரால் பெறப்படாமல் திரும்ப வரப்பெற்றது. 27.10.2025 அன்று நடைபெற்ற மன்ற கூட்டத்திலும் மனுதாரர் கலந்துகொள்ளவில்லை.
- இந்நிலையில் தொடர்ச்சியாக 26.08.2025, 29.09.2025 மற்றும் 27.10.2025 ஆகிய நாட்கள் நடைபெற்ற கூட்டங்களுக்கு மனுதாரர் வருகை புரியாததால் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு எண். 32(1) (l)ன்படி மனுதாரர் உறுப்பினர் பதவியிலிருந்து தகுதி இழந்து விட்டதாக என அறிவிக்கப்பட்டும், இதன் தொடர்ச்சியாக தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 46 ((3)படி ஒரு துணைத் தலைவரின் உறுப்பினர் பதவி முடிவுக்கு வரும்பொழுது துணைத்தலைவர் பதவியும் முடிவுக்கு வந்ததாகவே கருதப்படும் என்கிற 27.10.2025 நாளிட்ட அறிவிப்பு கடிதம் பெறப்படாமல் திரும்ப பெறப்பட்ட நிலையில் மீண்டும் 17.11.2025 நாளிட்ட கடிதம் மனுதாரருக்கு பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டு திரும்ப பெறப்பட்டுள்ளது.
- இந்நிலையில் மனுதாரரான தலைஞாயிறு பேரூராட்சி மன்ற துணைத் தலைவர், 8வது வார்டு உறுப்பினர் தொடர்ச்சியாக 3 சாதாரண கூட்டங்களுக்கு (ஆகஸ்ட் 2025, செப்டம்பர் 2025 மற்றும் ஆக்டோபர் 2025) வருகை தராமலும், மீண்டும் பதவி அமர்த்த எவ்விதமான விளக்கங்களும் பேரூராட்சிக்கும் மற்றும் மன்றத்திற்கும் அளிக்கப்படாததாலும் அவர் 8வது வார்டு உறுப்பினர் பதவியிலிருந்து தகுதி இழந்தவராக பேரூராட்சி மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (தீர்மான எண். 476 நாள் 28.11.2025).
- தலைஞாயிறு பேரூராட்சி மன்றத் துணைத் தலைவர் மற்றும் 8வது வார்டு உறுப்பினராக திரு. ம. கதிரவன் என்பவரை தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி

அமைப்புகளின் சட்டம் 1998 பிரிவு 32 (1) (l)ன்படி, பதவி நீக்கம் செய்வது தொடர்பான தலைஞாயிறு பேரூராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் உரிய நடவடிக்கை வேண்டி கருத்துரு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர், நாகப்பட்டினம் அவர்கள் மூலமாக தமிழ்நாடு தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

மனுதாரர் திரு. M. கதிரவன் தனது 18.02.2026 நாளிட்ட புகார் மனுவில் தான் தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி மன்ற 8வது வார்டு உறுப்பினராகவும் மற்றும் பேரூராட்சி மன்ற துணைத் தலைவராகவும் பணியாற்றி வரும் தன் மீது பேரூராட்சி செயற் பொறியாளர் திரு. ரமேஷ் என்பவர் காவல் துறையில் அளித்த பொய்யான புகாரினால் தொடரப்பட்ட வழக்கில் கடந்த 4 மாதங்களாக முன் ஜாமீன் கோரி வந்தேன் என்பதையும் இதன் காரணமாக கடந்த 3 மாதங்களாக தலைஞாயிறு பேரூராட்சி மன்ற கூட்டங்களுக்கு கலந்துகொள்ள இயலவில்லை எனவும், ஆனால் இது தொடர்பாக தான் விளக்கம் அளிக்க இருந்த நிலையில் தனக்கு எவ்வித முன்னறிவிப்பு அனுப்பாமலும் தனது தரப்பு விளக்கத்தினை கேட்காமலும் ஒருதலை பட்சமாக தன்னை தகுதி நீக்கம் செய்ய 28.11.2025 அன்று நடைபெற்ற பேரூராட்சி மன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர் எனவும் எனவே, எவ்வித நடைமுறைகளையும் பின்பற்றாமல் சட்டத்திற்கு புறம்பாக தனக்கு தகுதி நீக்கம் செய்யக்கூடாது எனவும் தான் உறுப்பினர் பதவியை தொடர்ந்து நீட்டிக்க வேண்டும் என மனுதாரர் தெரிவித்திருப்பதை அவரது புகார் மனு மற்றும் அவரின் வாக்குமூலம் வாயிலாக அறிய வருகிறது.

தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் மற்றும் 8வது வார்டு உறுப்பினரும் மற்றும் மனுதாரருமான திரு. M. கதிரவன் என்பவர் இறுதியாக பங்கேற்ற ஜூன் 2025 மாத கூட்டத்திற்கு பின்னர் தொடர்ச்சியாக 26.08.2025, 29.09.2025 மற்றும் 27.10.2025 ஆகிய நாட்களில் நடைபெற்ற 3 சாதாரண மன்ற கூட்டங்களுக்கு கலந்துகொள்ள உரிய அழைப்பிதழ்கள் பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டும், அதனை பெற்றுக்கொள்ளாமல் திரும்ப வர பெற்றது எனவும், எனவே தொடர்ந்து 3 மன்ற கூட்டங்களுக்கு மனுதாரர் வருகை புரியவில்லை எனவும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம், 1998, பிரிவு 32(1) (l)ன்படி தொடர்ந்து மூன்று மன்ற கூட்டங்களுக்கு வருகை தராமல் இருந்தால் அவர் பதவி இழந்தவர் ஆவார் என குறிப்பிடப்பட்டுள்ளதால் உரிய விளக்கத்தினை அளித்திட 17.11.2025 நாளிட்ட அறிவிப்பு மனுதாரருக்கு பதிவஞ்சல் மூலம் அனுப்பப்பட்டது எனவும் அதற்கும் மனுதாரரால் விளக்கம் ஏதும் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாததால் மனுதாரரை தகுதி நீக்கம் செய்ய 28.11.2025 அன்று பேரூராட்சி மன்றத்தால் தீர்மானம் இயற்றப்பட்டது எனவும் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்திருப்பதை அவரது அறிக்கை மற்றும் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

மேலும் மேற்காணும் பேரூராட்சி மன்ற தீர்மானத்தின் அடிப்படையில் உரிய நடவடிக்கை வேண்டி கருத்துரு பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தஞ்சாவூர் மண்டலம் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர், நாகப்பட்டினம் அவர்கள் வழியாக தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது என தெரிவித்திருப்பதையும் பேரூராட்சி செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

மேற்காணும் பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி மனுதாரர் திரு. M. கதிரவன் வகிக்கும் தலைஞாயிறு பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் மற்றும்

வார்டு உறுபப்பினர் பதிவியிலிருந்து தகுதி நீக்கம் செய்வதற்கான கருத்துரு குறித்து தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கையில் உள்ள நிலையில், மனுதாரரின் 18.02.2026 நாளிட்ட புகார் மனு மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு ஜூலை 17–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு. M. கதிரவன்,
கடைத்தெரு , தலைஞாயிறு,
வேதாரண்யம் வட்டம்,
நாகப்பட்டினம் மாவட்டம்.
2. செயல் அலுவலர்,
தலைஞாயிறு முதல்நிலை பேரூராட்சி, நாகப்பட்டினம் மாவட்டம்.
3. பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.
4. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம், இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

20/7/26
செயலாளர்
20/7/26

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
சென்னை–600 032